# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2025 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க,
## சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு
## (திருத்தச்) சட்டம்

---

**[2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2025, திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2025 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டம்

[2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.- ஓ 12/2025

## 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடிரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) பிரிவு 2 இன் (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எத்தேதியன்று சட்டமூலம் பாராளுமன்றச் சட்டமாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) பிரிவு 2 இன் (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் ஏற்பாடுகள் முறையே 2025, பெப்புருவரி 18 மற்றும் 2025, யூலை 1 ஆகிய தேதிகளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தின் முதலாம் அட்டவணையை திருத்துதல்

**2.** 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் பாகம் Iஅ இன் 24 ஆம் விடயத்தில், "மின்சாரத்தை வழங்குவதற்கு இலங்கை" என்ற சொற்களுக்குப் பதிலாக, "மின்சாரத்தை வழங்குவதற்கு 2025, பெப்புருவரி 18 ஆம் தேதிக்கு முன் இலங்கை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் பாகம் Iஅ இன் 4 ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவது இடப் படுகின்றது:-

"4. (அ) 2025, யூலை 1 ஆந்தேதிக்கு முன் ஓர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விற்பனை செய்யப்படும் பெற்றோல், தீசல் அல்லது மண்ணெண்ணெய்; அத்துடன்

(ஆ) 2025 யூலை 1 ஆம் தேதியிலிருந்து பயனுறுவதாக பெற்றோல், தீசல் அல்லது மண்ணெண்ணெய்;"; அத்துடன்

(3) அதன் பாகம் II இல்-

(அ) 4 ஆம் விடயத்தில், "பண்டங்களையும்" எனும் சொற்களுக்குப் பதிலாக "கொள்கலன் முனைய இயக்கிகளால் சர்வதேச போக்குவரத்து தொடர்பாக வழங்கப் படும் சேவைகள் உட்பட பண்டங்களையும்" எனும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) 23 ஆம் விடயத்தில், "ஏதேனும் சேவைகள்; அத்துடன்" எனும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் சேவைகள்;" எனும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) 24 ஆம் விடயத்தில், "வழங்கப்படும் சேவைகள்." எனும் சொற்களுக்குப் பதிலாக "வழங்கப்படும் சேவைகள்; அத்துடன்" எனும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஈ) 24 ஆம் விடயத்தை உடனடுத்து பின்வரும் புதிய விடயத்தை சேர்ப்பதன் மூலமும்:-

"25. இலங்கையில் நிதிச்சேவைகளை வழங்கும் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவரும் நூற்றுக்கு 20.5 வீதத்தில் அத்தகைய நிதிச்சேவைகளின் விநியோகத்தின் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் IIIஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் சேர்பெறுமதி வரிக்கு பொறுப்பாக உள்ளவருமான எவரேனுமாளின் நிதிச்சேவைகளும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்